# Puducherry

# Regional Bulletin

# Tamil

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

தேதி : 26.02.2026 – வியாழக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் இஸ்ரேலுடன், இந்தியா உறுதியாகவும், நம்பிக்கையுடனும் துணை நிற்பதாக, பிரதமர் திரு. நரேந்திரமோடி, கூறியுள்ளார்.

தமிழகம், உட்பட 10 மாநிலங்களில் இருந்து, தேர்ந்தெடுக்கப்பட உள்ள 37 மாநிலங்களவை உறுப்பினர்கள் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது.

புதுச்சேரியில், பிரதான் மந்திரி கரீஃப் கல்யாண் அன்ன யோஜனா திட்டத்தின் கீழ், நேரடி பணப் பரிமாற்றத்திற்கு, டிஜிட்டல் நாணயத்தை, மத்திய அமைச்சர் திரு. பிரஹலாத் ஜோஷி இன்று அறிமுகம் செய்து வைத்தார்.

புதுச்சேரி மற்றும் தமிழகத்தில் தேர்தல் முறைகேடுகள் குறித்து பொதுமக்கள் புகார் செய்யும் வகையில், தேர்தல் ஆணையம் தொலைபேசி எண்களை அறிவித்துள்ளது.

*மோடி – இஸ்ரேல் -1 (10)*

பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் இஸ்ரேலுடன், இந்தியா உறுதியாகவும், நம்பிக்கையுடனும் துணை நிற்கிறது என்று, பிரதமர் திரு. நரேந்திரமோடி, தெரிவித்துள்ளார். இஸ்ரேலுக்கு இரண்டு நாள் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள அவர், அந்நாட்டு நாடாளுமன்றமான நெசெட்டில், உரையாற்றினார். இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் உரையாற்றும் முதல் இந்திய பிரதமர் என்ற பெருமையை திரு. மோடி பெற்றுள்ளார். பயங்கரவாதம், உலகம் முழுவதும் அமைதிக்கு அச்சுறுத்தலாக உள்ளது என்றும், அந்த அச்சுறுத்தலை எதிர்த்து போராடுவதில் இந்தியா, வலுவான உறுதியுடன் இருப்பதாக, தமது உரையில் பிரதமர் தெரிவித்தார். இது குறித்த ஒரு செய்தித் தொகுப்பு....

(வாய்ஸ்)

*மோடி – இஸ்ரேல் - 2 (14)*

(வாய்ஸ்)

பிரதமரின் உரையை இஸ்ரேலிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலமுறை கைத்தட்டி பாராட்டினர். தமது உரையின்போது, இந்தியாவின் விரைவான பொருளாதார வளர்ச்சி குறித்தும் பிரதமர் எடுத்துரைத்தார். உலகின் முதல் மூன்று பொருளாதார நாடுகளில் ஒன்றாக மாறுவதற்கான பாதையில், இந்தியா பயணிக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையேயான உறவை வலிமையாக்கும் விதமாக, இஸ்ரேலிய நாடாளுமன்றத்தில், பிரதமர் திரு. நரேந்திர மோடி உரைக்கு மரியாதை செய்யும் விதமாக, Speaker of the knesset என்ற இஸ்ரேலிய நாடாளுமன்றத்தின் உயரிய பதக்கம் அவருக்கு வழங்கப்பட்டது. இந்த விருதைப் பெற்ற முதல் வெளிநாட்டுத் தலைவர் திரு. மோடி என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, டெல்அவிவ் நகரில், இஸ்ரேலிய பிரதமர் திரு. பெஞ்சமின் நெதன்யாகுவுடன், திரு. மோடி முக்கிய சந்திப்பை மேற்கொண்டார். அப்போது இருதரப்பு உறவுகளின் முழு வீச்சையும் இரு தலைவர்களும் மதிப்பாய்வு செய்தனர்.

*மோடி – இஸ்ரேல் - 3 (6)*

நீர் மேலாண்மை, விவசாயம், தொழில்நுட்பம் மற்றும் பிற முக்கிய துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்தும் விவாதித்தனர். பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று ஜெருசலேமில் உள்ள யாத் வாஷேமுக்கு சென்று அங்கு ஹோலோகாஸ்டில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்தி பிரார்த்தனை நிகழ்ச்சியிலும் பங்கேற்க உள்ளார். அதனைத் தொடர்ந்து அந்நாட்டு அதிபர் திரு. ஐசக் ஹெர்சாக்கையும் அவர் சந்தித்துப் பேச உள்ளார்.

*அமித் ஷா (10)*

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, 3 நாள் பயணமாக, இன்று பீகார் மாநிலம் சென்றுள்ளார். அங்கு ஹராரியாவில் நடைபெற்ற பேரணியில் உரையாற்றிய அவர், திரு. நரேந்திர மோடி அரசு இந்திய மண்ணில் இருந்து, ஒவ்வொரு ஊடுருவல்காரர்களையும் அகற்ற உறுதி பூண்டுள்ளது என்றார். ஊடுருவல்காரர்களை வெளியேற்றுவது என்பது வாக்காளர் பட்டியலில் இருந்து பெயர்களை நீக்குவதோடு மட்டும் நின்றுவிடாது என்றும், நாட்டிலிருந்து சட்டவிரோத ஊடுருவலை ஒழிப்பதற்கான விரிவான செயல்பாட்டையும் உள்ளடக்கி இருப்பதாகவும் தெரிவித்தார். வங்கதேசம் நேபாள எல்லையில் உள்ள கிஷண்கஞ்ச், பூர்ணியா மற்றும் கதிஹார் மாவட்டங்களுக்கும் திரு. அமித் ஷா பயணம் மேற்கொள்ள உள்ளார்.

*ராஜ்யசபா தேர்தல் (14)*

தமிழகம், மகாராஷ்டிரா, மேற்கு வங்கம் மற்றும் பீகார் உட்பட 10 மாநிலங்களில் இருந்து, 37 மாநிலங்களவை உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்காக நடைபெற உள்ள தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது. வேட்பு மனுக்களை தாக்கல் செய்ய அடுத்த மாதம் 5ஆம் தேதி கடைசி நாளாகும். அதற்கு அடுத்த நாள் மனுக்கள் மீதான பரிசீலனை நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. மனுக்களை விலக்கிக் கொள்ள மார்ச் 9ஆம் தேதி கடைசி நாளாகும். போட்டி இருக்கும் பட்சத்தில், மார்ச் 16ஆம் தேதி வாக்குப் பதிவு நடைபெறும். மகாராஷ்டிராவில் இருந்து 7 உறுப்பினர்களும், தமிழகத்தில் இருந்து 6 உறுப்பினர்களும், மேற்கு வங்கம் மற்றும் பீகாரில் இருந்து தலா 5, ஒடிசாவிலிருந்து 4, அஸ்ஸாமில் இருந்து 3, சத்தீஸ்கர், தெலங்கானா, ஹரியானா மாநிலங்களில் இருந்து தலா 2, ஹிமாச்சலப்பிரதேசத்தில் இருந்து ஒரு உறுப்பினரையும் தேர்ந்தெடுப்பதற்கு இந்தத் தேர்தல் நடைபெறுகிறது.

*பியூஷ் கோயல் (9)*

நாட்டின் வளர்ச்சியில் இளைஞர்களின் சக்தி முக்கிய பங்கு வகிக்கிறது என்று மத்திய தொழில் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார். மும்பையில் நடைபெற்ற சிறந்த தொழில் முனைவோருக்கான விருது வழங்கும் நிகழ்ச்சியில் பேசிய அவர், புதுமை கண்டுபிடிப்புகளில் இந்தியா முன்னணியில் இருப்பதற்குக் காரணம், இளைஞர்களே என்று தெரிவித்தார். செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தால், வேலைவாய்ப்புகள் பாதிக்கப்படும் என்ற கருத்து, தவறானது என்று தெரிவித்த அவர், இந்த தொழில்நுட்பத்தின் மூலம் வேலைவாய்ப்புகள் பெருகும் வாய்ப்பு உள்ளதாகவும் கூறினார்.

*அஷ்வினி வைஷ்ணவ் (13)*

இணையதள பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டியது அந்தந்த சமூக வலைதள நிறுவனங்களின் பொறுப்பு என்று மத்திய தகவல் ஒளிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார். புதுடெல்லியில், இன்று நடைபெற்ற தொழில்நுட்ப மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய அவர், தனிநபரின் ஒப்புதல் இல்லாமல் அவர் தொடர்பான வீடியோக்களை உருவாக்கக் கூடாது என்று தெரிவித்தார். இணையதள மோசடி மற்றும் குற்றங்களுக்கு எதிராக வலைதளங்கள், முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம் என்று வலியுறுத்திய அவர், அண்மைக் காலங்களில் அரசு சமூக வலைதளங்களை தீவிரமாக கண்காணித்து வருவதாகவும் தெரிவித்தார். சட்டவிரோத கருத்துக்களை பரப்புவதற்கோ அல்லது குற்றங்களை செய்வதற்கோ, இணையதளங்கள் பயன்படுத்தப்படாமல் இருப்பதை இணையதள நிறுவனங்கள் உறுதி செய்ய வேண்டும் என்று திரு. அஷ்வினி வைஷ்ணவ் கேட்டுக் கொண்டார்.

*டிஜிட்டல் நாணயம் -1 (18)*

புதுச்சேரியில், பிரதான் மந்திரி கரீஃப் கல்யாண் அன்ன யோஜனா திட்டத்தின் கீழ், நேரடி பணப் பரிமாற்றத்திற்கு, டிஜிட்டல் நாணயத்தை அறிமுகம் செய்யும் விழா, இன்று கம்பன் கலையரங்கில் நடைபெற்றது. இதில், மத்திய நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகத்துறை அமைச்சர் திரு. பிரஹலாத் ஜோஷி கலந்து கொண்டு டிஜிட்டல் நாணயத்தை அறிமுகம் செய்து வைத்தார். இவ்விழாவில் துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி ஆகியோர் தலைமை தாங்கி சிறப்பித்தனர். இவ்விழாவில் பேசிய மத்திய அமைச்சர் திரு. பிரஹலாத் ஜோஷி, பாரதம் உலகிற்கே வழிகாட்டும் நிலையை எட்டியுள்ளதாக தெரிவித்தார். டிஜிட்டல் யுகத்தில் பிரதமர் திரு. நரேந்திர மோடி, புரட்சியை உருவாக்கி வருவதாகக் கூறிய அவர், இதில், டிஜிட்டல் நாணயம் என்பது ஒரு மைல் கல் என்று தெரிவித்தார். ஒவ்வொரு ரூபாயும், தானியமும் சரியான பயனாளிகளை சென்றடைய

வேண்டும் என்பதே பிரதமரின் எண்ணம் என்றும் வெளிப்படைத்தன்மை மற்றும் இடைத்தரகர்கள் இல்லாத நிலையை ஏற்படுத்தவே டிஜிட்டல் நாணயம் பயன்படுத்தப்படுவதாகவும் தெரிவித்தார். நாடு முழுவதும் 80 கோடி மக்களுக்கு இலவசமாக அரிசி, கோதுமை மற்றும் சிறுதானியங்கள் வழங்குவதாகவும் அவர் தெரிவித்தார். இது குறித்த ஒரு செய்தித் தொகுப்பு... (வாய்ஸ்)

*டிஜிட்டல் நாணயம் -2 (16)*

(வாய்ஸ்)

மத்திய அமைச்சர் விழாவில் உரையாற்றும்போது, கடந்த 11 ஆண்டுகளில் 25 கோடி மக்கள் வறுமையில் இருந்து மீட்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். உணவுப் பொருட்கள் விநியோகம் குறித்து அரசு கண்காணித்து வருவதாகவும், மாதந்தோறும் 20 லட்சம் பேரிடம் இது குறித்து கருத்து கேட்கப் படுவதாகவும் தெரிவித்தார்.

இத்திட்டம், ஏற்கனவே குஜராத் மாநிலம், அகமதாபாத்தில் தொடங்கி உள்ளதை சுட்டிக்காட்டிய அவர், தற்போது புதுச்சேரியிலும், அடுத்து சண்டிகரிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்றார். சோதனை முறையில் தற்போது செயல்படுத்தப்படும் இத்திட்டம், தொடர்ந்து நாடு முழுவதும் செயல்படுத்தப்படும் என்றார். இவ்விழாவில் பேசிய துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், இந்தியாவிலேயே - புதுச்சேரியில்தான் தரமான அரிசி வழங்கப்படுகிறது என்றார். புதுச்சேரி மக்களின் உணவு பாதுகாப்பில், ஒரு புதிய அத்தியாயமாக இன்று தொடங்கப்பட்ட டிஜிட்டல் நாணயம் திகழும் என்றார். தேசிய உணவு பாதுகாப்பு சட்டத்தை வலுப்படுத்து விதமாக ஒரு சிறப்பான திட்டம் புதுச்சேரியில் தொடக்கி வைக்கப்பட்டு இருப்பது பெருமைக்குரியது என்று கூறினார்.

*டிஜிட்டல் நாணயம் - 3 (13)*

விழாவில், முதலமைச்சர் திரு. ரங்கசாமி பேசும்போது, பசியில்லாத நிலையை உருவாக்க வேண்டும் என்ற மத்திய – மாநில அரசுகளின் எண்ணத்தின்படி, புதுச்சேரியில், எல்லோருக்கும் உணவு என்ற நிலையை

அரசு உருவாக்கி உள்ளதாகத் தெரிவித்தார். புதிய தொழில்நுட்பத்தின் மூலம் மக்களுக்கு உதவும் வகையில், இந்த டிஜிட்டல் நாணயம் கொண்டுவரப்படுவதாக க் கூறினார். மத்திய அரசு எந்தவொரு திட்டத்தை கொண்டு வந்தாலும், அதனை ஏற்றுக் கொள்கின்ற பக்குவம் புதுச்சேரி அரசுக்கும் – மக்களுக்கும் உள்ளதாக முதலமைச்சர் தெரிவித்தார். இந்த விழாவில், சட்டப்பேரவைத் தலைவர் திரு. செல்வம், பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன், குடிமைப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. P.R.N. திருமுருகன், சட்டப்பேரவை துணைத்தலைவர் திரு. ராஜவேலு, அரசு கொறடா திரு. A.K.D ஆறுமுகம், மத்திய அரசின் செயலர் திரு. சஞ்சீவ் சோப்ரா, தலைமைச் செயலர் டாக்டர் சரத் சவுகான் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

*தேர்தல் புகார் (13)*

புதுச்சேரி மற்றும் தமிழகத்தில் சட்டமன்றத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், தேர்தல் முறைகேடுகள் குறித்து பொதுமக்கள் புகார் செய்யும் வகையில், தேர்தல் ஆணையம் அதற்கான தொலைபேசி எண்களை அறிவித்துள்ளது. அதிக அளவு பணம், நகைகள் அல்லது பரிசுப் பொருட்கள் போன்றவற்றை பதுக்கி வைத்திருப்பது அல்லது விநியோகிப்பது போன்றவை குறித்தும், பொதுமக்கள் புகார் செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இலவச தொலைபேசி எண் 1800 – 425-6669 மற்றும் Fax எண் – 044-28 27 1915 என்ற எண்ணிலோ அல்லது 94453 94453 என்ற வாட்ஸ் அப் எண் மூலமாகவோ புகார்களை தெரிவிக்கலாம். மேலும், tn.electioncomplaints2026@incometax.gov.in என்ற இ-மெயில் முகவரியிலோ புகார்களை தெரிவிக்கலாம் என்றும் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. புகார் தெரிவிப்பவரின் அடையாளம், ரகசியமாக வைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*போக்குவரத்துத் துறை (9)*

புதுச்சேரியில் போக்குவரத்துத் துறையின் ஆன் லைன் சேவைகளை பயன்படுத்த ஏற்கனவே உள்ள SBI கட்டண நுழைவாயிலுடன், தற்பொழுது HDFC கட்டண நுழைவாயிலையும் பயன்படுத்தலாம் என்று போக்குவரத்து ஆணையர் திரு. அமன் ஷர்மா தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், Debit Card, Credit Card, Net Banking, UPI Payment மற்றும் QR குறியீடு அடிப்படையிலான கட்டணம் போன்ற அனைத்து ஆன் லைன் கட்டண முறைகளுக்கும் HDFC கட்டண நுழைவாயில் மூலம் எந்தவித கூடுதல் கட்டணமும் இல்லாமல் பயன்படுத்தலாம் என்று தெரிவித்துள்ளார்.

*நீர் மேலாண்மை மாஹே (14)*

மத்திய நிலத்தடிநீர் வாரியம் மற்றும் ராய்ப்பூர், ராஜீவ் காந்தி தேசிய நிலத்தடிநீர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில், மாஹேவில் நிலத்தடிநீர் மேலாண்மை குறித்த ஒருநாள் பயிலரங்கு இன்று நடைபெற்றது. மகாத்மா காந்தி அரசு கலைக்கல்லூரியில் நடைபெற்ற இக்கருத்தரங்கை, மாஹே நகராட்சி ஆணையர் திரு. ஸ்ரீஜித் தொடக்கி வைத்தார். அப்போது பேசிய அவர், மாணவர்கள் அர்த்தமுள்ள சுய பரிசோதனை மேற்கொள்வதோடு மற்றவர்களுடன் இணைந்து செயல்படும்போதுதான், தனிப்பட்ட வளர்ச்சி சாத்தியமாகும் என்றார். குடிநீர், உயிர்நாடியைப் போன்று முக்கியமானது என்றும் மிகுந்த பொறுப்புடன் அதை பாதுகாப்பது நமது கடமை என்றும் கூறினார். இக்கருத்தரங்கில், சென்னை மத்திய நிலத்தடிநீர் வாரியத்தின் மண்டல இயக்குநர் திரு. சிவக்குமார் பேசும்போது, நீர் வளங்கள், நதி மேம்பாடு மற்றும் கங்கை நதியை சுத்தப்படுத்துதல் தொடர்பான முக்கிய முயற்சிகளை மையமாகக் கொண்ட மூன்றடுக்கு பயிற்சி திட்டம் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

*வானிலை (7)*

தென்னிந்திய பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல கீழடுக்குச் சுழற்சி காரணமாக, அடுத்த 5 நாட்களுக்கு தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலையே நிலவும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வட தமிழக கடலோரப் பகுதிகள் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தின் ஓரிரு இடங்களிலும் அதிகாலை வேளையில் நாளை லேசான பனிமூட்டம் காணப்படும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் இஸ்ரேலுடன், இந்தியா உறுதியாகவும், நம்பிக்கையுடனும் துணை நிற்பதாக, பிரதமர் திரு. நரேந்திரமோடி, கூறியுள்ளார்.

தமிழகம், உட்பட 10 மாநிலங்களில் இருந்து, தேர்ந்தெடுக்கப்பட உள்ள 37 மாநிலங்களவை உறுப்பினர்கள் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது.

புதுச்சேரியில், பிரதான் மந்திரி கரீஃப் கல்யாண் அன்ன யோஜனா திட்டத்தின் கீழ், நேரடி பணப் பரிமாற்றத்திற்கு, டிஜிட்டல் நாணயத்தை, மத்திய அமைச்சர் திரு. பிரஹலாத் ஜோஷி இன்று அறிமுகம் செய்து வைத்தார்.

புதுச்சேரி மற்றும் தமிழகத்தில் தேர்தல் முறைகேடுகள் குறித்து பொதுமக்கள் புகார் செய்யும் வகையில், தேர்தல் ஆணையம் தொலைபேசி எண்களை அறிவித்துள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. BI / SM / RK